மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்

**Provincial Department of Education, Northern Province**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை 2017 நவம்பர்

**General Certificate of Education (Ord. Level) Third Term Examination 2017**

| | | |
|---|---|---|
| நுண்கலை I<br>**Art and Craft I** | 84 T I | ஒரு மணித்தியாலம்<br>**One Hour** |

**அறிவுறுத்தல்கள்**

1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக
2. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
3. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை(x) இடுக.
4. அவ்விடைத்தாளில் மறுபக்கத்திலுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

01) கிராமிய மக்களின் வாழ்வோடு ஒன்றிய பண்டைய மக்களின் எளிமையான வாழ்வின் பெரும் பங்களிப்பினை அலங்கார பாய்பின்னல் கலை கொண்டிருக்கிறது. இலங்கையில் இக்கலை முக்கியத்துவம் பெற்ற இடம்.

i.மாத்தறை ii. தும்பறை iii.களுத்துறை iv. பசறை


02) சாயங்களைப் பயன்படுத்தி செய்யும் அலங்காரங்களுக்கு நிறக்கலவை மூலம் வெவ்வேறு நிறங்களை தயாரித்துக்கொள்ள முடியும். செம்மஞ்சள் நிறத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சேர்க்கப்பட வேண்டிய நிறங்கள்.

i.சிவப்பும் வெள்ளையும் ii. மஞ்சளும் வெள்ளையும்

iii. சிவப்பும் வெள்ளையும் iv. மஞ்சளும் சிவப்பும்

03) நீங்கள் பயன்படுத்தும் வரைதாள் (half sheet) அளவீட்டுக்கு அமைய பின்வரும் எவ்வகைக்குரியதென குறிப்பிடுக.

i.$A_1$ ii.$A_2$ iii. $A_3$ iv. $A_4$

04) 


இங்கே தடித்த கடதாசியினால் அமைக்கப்பட்ட 12cm குழாய் காணப்படுகிறது. இக்குழாயின் விருத்தி.

i.சாய் சதுரமாகும் ii.செவ்வகமாகும்

iii. சரிவகமாகும் iv.சதுரமாகும்

05) பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி புடைவைகளை அலங்கரித்துக்கொள்ள முடியும். சில்க் புடைவைகளுக்கு பயன்படுத்தப்படும் வெப்ப ஒட்டு கடதாசி வகையைத் தெரிவுசெய்க.

i.சிவப்பு சுட்டுத் துண்டு கொண்ட வெப்ப ஒட்டுக் கடதாசி

ii.ஊதா சுட்டுத் துண்டு கொண்ட வெப்ப ஒட்டுக் கடதாசி

iii.இளஞ்சிவப்பு சுட்டுத் துண்டு கொண்ட வெப்ப ஒட்டுக் கடதாசி

iv.மஞ்சள் சுட்டுத் துண்டு கொண்ட வெப்ப ஒட்டுக் கடதாசி

06) பின்வருவனவற்றுள் கட்புலக் கலையாக கருதப்படும் நாட்டார் கலைத் தொகுதியைத் தெரிவுசெய்க.

i.சேனைப்பாடல், அறிவு வெட்டுப் பாடல்

ii.அரக்குக் கைத்தொழில், செம்புநடனம்

iii.புடவைக் கைத்தொழில், களிமண் கைத்தொழில்

iv.முகமூடிக் கைத்தொழில், மாட்டுவண்டிப் பாடல்

07) இலங்கையில் கயோலின் களிமண் காணப்படும் இடம்.

i.மன்னார் பெருநிலப்பரப்பு ii.பொறலஸ் கமுவ, மீடியா கொட

iii.களுத்துறை பிரதேசம் iv.இரத்தினபுரி கேகாலைப் பிரதேசம்.

08) அண்மையில் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் மட்பாண்டம் செய்யும் தொழில்நுட்பத்தைப் பெற்றிருந்தனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வகழ்வாராய்ச்சி நடைபெற்ற இடம்.


i.பலாங்கொட ii.பொறலஸ்கமுவ iii.அம்பாறை iv.புத்தளம்

09) பின்வருவனவற்றுள் துணி அலங்கார முறை அல்லாதது.

i.கையினால் அச்சிடல் ii.ஸ்டென்சில் அச்சு

iii.திரைச்சட்ட அச்சிடல் iv.தட்டச்சிடல்

10) நார்களை இனங்காண்பதற்காக நுணுக்குக்காட்டி பரிசீலனை மூலம் கிடையான நெடுக்குத் தோற்றங்கள் காட்டப்பட்டுள்ள பின்வருவனவற்றுள் நீட்டுப்பக்கத் தோற்ற அடிப்படையில் சாதாரண நார் வகையைக் காட்டும் படம் எது?





11) வெளியில் பெற்றுக்கொள்ளக்கூடிய துணியின் பகுதியொன்றில் தமக்குத் தேவையான ஆக்கத்தின் எந்தவொரு இடத்திலும் தைக்காமல் ஒட்டும் முறை பயன்படுத்தப்படுவது.

i.வலை வேலைப்பாடு அலங்கார முறையில் ii.துண்டு வேலை அலங்கார முறையில்

iii.வெப்ப ஒட்டு அலங்கார முறையில் iv.பற்றிக் அலங்கார முறையில்

12) பின்வரும் கேத்திர கணித அமைப்புக்கள் மூலமாக செங்கோணம், நேர்க்கோணம் ஆகியன வகைக் குறிக்கப்பட்டுள்ளன. இந்தக் கோணங்களின் பெறுமானங்களின் கூட்டுத்தொகை.



i.$150^0$ ஆகும் ii.$180^0$ ஆகும் iii.$270^0$ ஆகும் iv.$360^0$ ஆகும்

13) தரை அலங்கரிப்பின் போது வெயில், மழை, காற்று ஆகிய காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய ஆக்கங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தக்கூடிய மூலப்பொருள் எது.

i.களி ii.கடதாசிக்கூழ் iii.இரும்பு iv.சீமெந்து


14) மட்பாண்டங்களின் அலங்கரிப்புக்குப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன இவற்றுள் கொலாஜ் எனப்படுவது.

i.கடதாசிக்கூழ் பயன்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆக்கங்களாகும்
ii.வர்ணக் கடதாசிகளைக் கழித்து ஒட்டும் ஆக்கங்களாகும்
iii.இலைகள் அல்லது கடதாசிகளை வெட்டி ஒட்டித்தயாரிக்கப்படும் ஆக்கங்களாகும்
iv.துணிகளை வெட்டி ஒட்டித் தயாரிக்கப்படும் ஆக்கங்களாகும்

15) பாவினை நீட்டிக்கொள்வதற்காக உடை நூல்களை பொருத்திவைத்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணத்தைத் தெரிவுசெய்க.

i.தார்க் குச்சிசட்டம் ii. நூல் பிரிக்கும் சட்டம் iii.பாவோடு குடம் iv.சீப்புச்சட்டம்

16) நெசவுத்தறி உப பகுதி ஒன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது அது.



i.சீப்பு எனப்படும் ii.விழுது வரிசை எனப்படும்
iii.ஊசி எனப்படும் iv.சீப்பு சட்டம் எனப்படும்

17) முற்காலத்தில் எமது மூதாதையர் ஓவியம் வரையவும், நூல்களை வர்ணங்களாக்கவும் சூழலையே நம்பி இருந்தனர். மஞ்சள் வர்ணத்தைப் பெற பெறப்பட்ட மூலப் பொருள் எது

i.வெண்களி ii.சாதிலிங்கம்
iii.நீல அலரி iv.கொக்கட்டு மரத்தின் பால்

18) புடைவை அலங்கரிப்பிற்காக பல்வேறு கலை நுட்பங்கள் காணப்படுகின்றன. பின்வருவனவற்றுள் ஒரே அலங்காரத்தை பல தடவைகள் பெறக்கூடிய அச்சு முறையைக் குறிப்பது.

i.நூல் அச்சுப் பதிப்பு ii.சாதாரண அச்சுப் பதிப்பு
iii.துளை தகட்டு அச்சுப் பதிப்பு iv.நியம அச்சுப்பதிப்பு

19) கோணம் என்பது இரண்டு நேர் கோடுகளின் அந்தங்கள் சந்திப்பதனால் உருவாகுவதாகும். இக் கோடுகள் இரண்டிற்கும் இடையில் அமைந்திருப்பது கோணமாகும். அவ்வடிப்படையில் நேர் கோடுகளால் மூடிய தள உருக்களை எவ்வாறு அழைக்கலாம்.

i.விரி கோணங்கள் என அழைக்கலாம் ii..பல்கோணிகள் என அழைகலாம்
iii.நேர்க் கோணங்கள் என அழைக்கப்படும் iv.அறுகோணிகள் என அழைக்கபபடும்.

20) உலகத்திலேயே மிக அருகிய(குறைந்த) வகையான ஆடு வகை இதுவாகும். ஆனால் பெறுமதியான உரோமம் இந்த மிருகத்திடமிருந்தே எடுக்கப்படுகிறது. அந்த மிருகம் எது?

i.விக்குனா ii.லாமா iii.காஷ்மீர் ஆடு iv.அங்கோரா ஆடு

21) அன்னாசி நார்களைப் பயன்படுத்தி புடைவைகளை நெய்யும் நாடு?

i.இலங்கை ii.பிலிப்பைன் iii.இந்தியா iv.சீனா

22) சுட்டபின் வெள்ளை நிறமாக மாறுவது?

i.களிக்கல் ii.சிலிக்கா மணல் iii.படிகம் iv.கலவோடு

23) பின்வருவனவற்றுள் சாக்குகளைத் தயாரிப்பதற்கான நூலைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் தாவரத்தை தெரிவு செய்க.

i.பட்டுச்சணல்(Flax) ii.மணிலா(Manila)
iii.சடைச்சணல்(Jute) iv.ரமிப்புல்(Ramie)

24) வீட்டுக்கு முன் புறத்திலுள்ள திறந்த வெளியில் மேற்கொள்ளப் பொருத்தமான பூங்கா அலங்கரிப்பு ஆக்கத்தை நிருமாணிக்க மிகப் பொருத்தமானது

i.கடதாசிக் கூழ் ஊடகம் ii.களி ஊடகம்
ii.சீமெந்து ஊடகம் iv.உலோக ஊடகம்

25) நார்களை இனங்காண்பதற்கான எதிர்ப்புச் சேதனையின் போது பருத்தி நாரை இனங்காணத்தக்க இயல்பாக அமைவது.

i.விரைவில் தீப்பற்றி மெதுவாக எரிதல்
ii.தாமதமாக தீப்பற்றி தீச்சுவாலை சிறியதாக இருத்தல்
iii.தாமதமாகத் தீப்பற்றி எரிந்த மணம் ஏற்படல்
iv.கடதாசியை எரிக்கும் போதான ஒப்பான மணம் ஏற்படலும் மஞ்சள் நிற பெரிய சுவாலை ஏற்படலும்


26) நிறந் தீட்டற்கலையில் மிக முக்கிய உபகரணமான தூரிகை வடிவங்களை மேம்படுத்திக்காட்டும் மெல்லிய கோடுகள், புள்ளிகள் என்பவற்றை வரைவதற்கு மிகப் பொருத்தமான தூரிகையானது.

i.உருண்டைத் தூரிகை ii.கூர்முனைத் தூரிகை
iii.தட்டையான தூரிகை iv.பெரிய தூரிகை

27) செயற்கை முத்துக்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பாண் கலவையைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பதார்த்தங்கள் அடங்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.

i.பாண், பைண்டர் கம், சோளம்மா, நிறமூட்டி
ii.பாண், பைண்டர் கம், பிஸ்கட் தூள், நிறமூட்டி
iii.ஒரு நாள் சென்ற பாண், பைண்டர் கம், நப்தலீன் தூள், நிறமூட்டி
iv.பாண், பைண்டர் கம், கோதுமை மா, நிறமூட்டி

28) கீழ்வரும் படம் குறிப்பது.



i.உருளையின் வளை மேற்பரப்பின் விரியல் ஆகும்
ii.முழு உருளையின் விரியல் ஆகும்
iii.செவ்வகத்தின் விரியல் ஆகும்
iv.சதுரத்தின் விரியல் ஆகும்

29) மிகச்சிறந்த பருத்தியாக இனங்காணப்பட்டுள்ள பருத்தி எது?

i.இந்தியப் பருத்தி ii.பீளர் பருத்தி iii.சீனப் பருத்தி iv.சீ ஐலண்ட் பருத்தி

30) கூடை, பாய் போன்றவற்றை பின்னும் போது பயன்படுத்தப்படும் நெசவு முறை எது?

i.சாதா நெசவு முறை ii.சரிவுக்கோட்டு நெசவு முறை
iii.சற்றின் நெசவு முறை iv.அலைச்சரிவு நெசவு முறை

31) களிமண் மூலக்கூற்றில் காணப்படும் கூறுகள் எவை?

i.களிக்கல், சிலிக்கா, தொலமைற்று

ii.அலுமினியம் ஒட்சைட்டு, சிலிக்கனீரொட்சைட்டு, நீர்

iii.பொற்றாசியம், நைத்தேனியம் ஒட்சைட்டு, கல்சியம்

iv.சிலிக்கன் ஒட்சைட்டு, அலுமினியம் ஒட்சைட்டு

32) ஒரு சென்ரி மீற்றரில் நீள நூல் 20 உடைய 60மீற்றர் நீளமும் 40 சென்ரி மீற்றர் அகலமும் கொண்ட பாவுநூலிலுள்ள நூற்புரிகளின் எண்ணிக்கை எத்தனை?

i.20 x 60 = 1200 ii.60 x 40 = 2400

iii.60 x 20 x 40 = 48000 iv.40 x 20 = 800

33) நூல்களிற்கு இலக்கமிடுவது ஒரு கிலோகிராமில் காணப்படும் நூற்களின் எண்ணிக்கைக்கு அமைவாகும் ஒரு கிலோகிராமில் 50 இரட்டை நூற்களிகள் அடங்கியிருக்குமாயின் இந்த நூலின் இலக்கம் யாது?

i.$2/100^s$ ii.$50^s$ iii.$2/50^s$ iv.$100^s$

34) சூளையில் பாண்டங்களை ஒன்றுடனொன்று ஒட்டாமல் வைத்துச் சுடுவதற்காகப் பயன்படுவது.

i.சாகர் பின்க் ii.ஏந்தனம் iii.சாகர் பெட்டி iv.தீ தாள்

35) "டெகோ பாஜ்" என்னும் சொல் எந்த நாட்டு மொழியிலிருந்து வந்த சொல்லாகும்.

i.ஒல்லாந்து ii.சீனா iii.இந்தியா iv.பிரான்ஸ்

36) திரைச்சட்ட அச்சிடலின் போது புடைவைக்காக அதிகளவில் பயன்படுத்தப்படும் சாயவகையைத் தெரிவுசெய்க.

i. அமிலச் சாயம் (Acid Dye) ii.அடிப்படைச் சாயம் (Basic Dye)

iii.பிக்மன்ட் சாயம் (pigment Dye) iv.வெட் சாயம் (Vat Dye)

37) புடைவை உற்பத்தியில் நார்கள் மிக முக்கிய இடம் வகிக்கின்றன. பின்வருவனவற்றுள் செயற்கை பொலிமர் நார்த் தொகுதியை தெரிவுசெய்க

i.அக்கிலிக் ஓர்லோன், பொலி எமைட நைலோன் ii.லினன், யூட்

iii.றெயோன், விஸ்கோஸ் ரெயோன் iv.தங்கம், வெள்ளி

38) சாதா/சிறுதறி நெசவுக் கோலங்கள் எவை?

i.பாய் நெசவு, பாவுவிலா நெசவு, குறுக்கு ஓரநெசவு

ii.சற்றின், சற்றீன், குறுக்கு ஓர நெசவு

iii.பாவு விலா, கோணச்/ சுருள் சரிவு

iv.சற்றீன், பாய் நெசவு

39) பீங்கான் களி என கூறப்படும் களி எது?

i.சிவப்பு களி (செங்களி) ii.தீக்களி

iii.உருண்டைக் களி(பந்துக்களி) iv.கயோலின் (வெண்களி)

40) பிஸ்கட் பதம் வரை சுடப்படும் பாத்திரங்களுக்கு மினுங்கும் கலவை பூசப்பட்டு வர்ணமூட்டும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?

i.வெளிற்றுதல் ii.சாயமூட்டல்

iii.மினுக்கமூட்டல் iv.வர்ணமூட்டுதல்

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
**Provincial Department of Education, Northern Province**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை 2017 நவம்பர்
**General Certificate of Education (Ord. Level) Third Term Examination 2017**

| நுண்கலை II<br>**Art and Craft II** | 84 T I | இரண்டு மணித்தியாலம்<br>**Two Hours** |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

1. முதலாம் வினாவும் வேறு தெரிந்தெடுத்த நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01) பாடசாலை மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள விற்பனை கண்காட்சியும், கைப்பணிப் போட்டியும் 2017 டிசெம்பர் 27ம் திகதி மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

i).இந்தக் கண்காட்சிக்குரிய மகுடவாசகம் அடங்கிய விளம்பரம் ஒன்றின் மாதிரியை வரைக

ii).பிரதம விருந்தினருக்கு அனுப்புவதற்கான அழைப்பிதழ் ஒன்றின் மாதிரியை வரைக

iii).உள்ளூர் இலைகள், மலர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தயாரிக்கக்கூடிய மங்கள விளக்கொன்றின் வரிப்படத்தை வரைக.

iv).விழாவின் ஏற்பாட்டுக் குழுவினர் அணிவதற்குப் பொருத்தமான இலச்சினை ஒன்றை வரைக.

v).கண்காட்சி வளாக முன்றலில் அமைப்பதற்கு ஏற்ற அலங்கார வளைவு ஒன்றை வரைந்து உள்ளூர் அலங்கரிப்பு பொருட்களைப் பயன்படுத்தி அலங்கரித்துக் காட்டுக

vi).அறிவிப்பு பீடத்தை அலங்கரிக்க ஏற்ற அலங்காரமொன்றை வரைக

vii).கண்காட்சிக் கூடத்தில் வைப்பதற்கேற்ற களிமண் பாண்டத்தை அலங்கரிப்பதற்காக எம்முறைகளைப் பயன்படுத்துவீர்?

viii).விற்பனை செய்யப் பொருத்தமான கேந்திர கணித வடிவங்களைக் கொண்டதாகத் தயாரிக்கக்கூடிய புடைவைத் துண்டுகளிலான ஆக்கங்கள் இரண்டைப் பெயரிடுக

02) வனைதல் சில்லைப் பயன்படுத்தி மட்பாண்டங்களை நிர்மாணித்தலானது கி.மு.500ம் ஆண்டு தொடக்கம் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

i).வனைதற் சில்வின் வகைகளைத் தருக.

ii).மட்பாண்ட அச்சுக்களை அமைப்பதற்கு பயன்படுத்தப்படும் அச்சு ஊடகங்களைத் தருக.

iii).மட்பாண்டங்களைச் சுடுவதனால் ஏற்படும் மாற்றங்கள் எவை?

iv).சூளைகளை வகைப்படுத்தி பகுதிச் சூளையின் 3 வகையையும் தருக.

03) இயற்கைப் பூக்களில் காணப்படும் வடிவம், வர்ணங்களைப் பின்பற்றி பல்வேறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்திச் செயற்கைப் பூக்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

i).செயற்கைப் பூக்களினை நிர்மாணிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஊடகங்கள் சிலவற்றைத் தருக

ii).செயற்கைப் பூக்கள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கடதாசி வகைகளைத் தருக.

iii).செயற்கைப் பூக்களைப் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் இரண்டும் பிரதி கூலங்கள் இரண்டும் தருக.

04) மலர்த் தயாரிப்புக்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் எம்மிடையே பல உள்ளன.

i).மணமகளின் தோழியருக்குப் பொருத்தமான மலர்க்கொத்து ஒன்றை வடிவமைக்குக.(மாதிரி)

ii).மேசைக்கான மலர் அலங்காரம் ஒன்றை வரைக.

iii).அதிதிகளை வரவேற்பதற்கான மலர்மாலை ஒன்றை தயாரிக்குக.(மாதிரி)

05) தற்காலத்தில் மட்பாண்டஅலங்காரத்திற்காகப் பல்வேறு நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

i).மட்பாண்ட அலங்கரிப்பிற்காகச் சுற்றாடலில் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருட்கள் ஐந்தினைப் பெயரிடுக.

ii).கடதாசி ஊடகத்தின் மூலம் மட்பாண்டத்தை அலங்கரிக்கும் முறைகளைப் பெயரிடுக..

iii).மட்பாண்டங்களை அலங்கரிக்க பயன்படுத்தும் பாண் கலவை தயாரிக்கும் முறையைத் தருக.

06) பத்திக் முடிச்சிடல் முறை சாயமூட்டல் மூலம் செய்யப்படும் புடைவை அலங்காரமாகும்.

i).சாயமூட்டல் மூலம் புடைவை அலங்கரிக்கப்படும் முறைகளைப் பெயரிடுக.

ii).பத்திக்கலை விருத்தி பெற்றுள்ள நாடுகள் 3இனை பெயரிடுக..

iii).மெழுகுக் கலவைக்குத் தேன் மெழுகு, குங்கிலியம் போன்ற பொருட்கள் சேர்க்கப்படுவதற்கான காரணங்கள் யாவை?

iv).அலங்காரத்தின் மீது மெழுகு இடப்படும் முறைகள் 3இனைக் கூறுக.

07) சட்டத்தில் பொருத்தப்பட்ட மெல்லிய திரையில் அலங்காரத்தைப் பெற்றுச் சாயத்தைப் பயன்படுத்தி வேறொரு ஊடகத்தில் மேற்புறத்தில் அலங்காரத்தை ஏற்படுத்தல் திரைச்சட்ட அச்சிடல் அல்லது பட்டுத்திரை சட்ட அச்சிடல் முறை எனப்படும்.

i).பட்டுத் திரைச் சட்ட அச்சிடலின் போது சட்டகத்தில் அடங்க வேண்டிய பண்புகள் மூன்று தருக.

ii).சட்டத்தின் திரைக்காகப் பயன்படுத்தப்படும் புடைவை வகைகள் மூன்றினைக் கூறுக.

iii).அச்சிடல் தளத்தில் காணப்பட வேண்டிய அம்சங்கள் 3இனைத் தருக.

iv).வெளிச்சம் ஊடுருவும் முறையில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் எவை?